<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.ii**</u>

<u>**இராமநாதபுரம்.**</u>

**முன்னிலை :** திரு. A. ஆதியான். B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 08–ம் நாள் திங்கள்கிழமை

<u>Crl. M. P. No.540/2026</u>

<u>CNR NO. TNRM 02-001585-2026</u>

வேட்டைக்காரன், (வயது 34/2026)
த/பெ. சுகுமாறன் . . . மனுதாரர்/எதிரி

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
கேணிக்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 0230/2026
U/Sec. 305(a), 331(3), 331(4) BNS . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 02.06.2026ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. நாகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

<u>உ த் த ர வு</u>

**2)** மனுதாரர்/எதிரி கேணிக்கரை காவல்நிலைய குற்ற எண். 0230/2026 பிரிவுகள், 305(a), 331(3), 331(4) BNS வழக்கில் 29.05.2026-ம் தேதி முதல் நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை பிணையில் விடுவிக்கக்கோரி BNSS பிரிவு 480ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனுவின்பேரில் அரசுத்தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பதில் பெறப்பட்டது. அரசு தரப்பில் பதிலில் எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடக்கூடும் என்பதாலும் சாட்சிகளை கலைக்க கூடும் என்பதாலும் சரிவர

விசாரணைக்கு ஆஜராகமாட்டார் என்பதாலும், தலைமறைவாக உள்ள எதிரிகளை கைது செய்ய வேண்டியுள்ளதாலும், எதிரியின் கைவிரல் ரேகை பதிவானது இராமநாதபுரம் விரல் ரேகை பதிவு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வேறு காவல்நிலைய குற்ற வழக்குகளில் எதிரியின் கைவிரல் ரேகை பொருந்துகிறதா என அறிக்கை பெற வேண்டியுள்ளதாலும், எதிரியின் மீது எட்டு முன் வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரர்/எதிரி கடந்த 11 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/எதிரியை பிணையில் விடுதலை செய்யும் பட்சத்தில் தலைமறைவாகவோ அல்லது அரசு தரப்பு சாட்சிகளை கலைக்கவோ மாட்டார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் எவ்விதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும், எனவே எதிரியை பிணையில் விட உத்தரவிட வேண்டி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

5) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் குற்ற எண். 0230/2026 பிரிவுகள் 305(a), 331(3), 331(4) BNS ன் கீழ் எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன்விசாரணை ஆரம்ப கட்டநிலையில் உள்ளது என்பதாலும், எதிரிக்கு எட்டு முன் வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும், எதிரியை பிணையில் விடுவித்தால் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6) முடிவில் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 08-ம் தேதி திங்கள்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.06.08 15:36:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.